www.padippakam.com





# மக்கள் செங்கோல்




திங்களிதழ், தலைநகர்த் தமிழ்ச் சங்க வெளியீடு

மலர் - 7 இதழ் - 63 நவம்பர் / 2001 துலை - நளி தி.ஆ. 2032

**சிறப்பாசிரியர்கள்** புலவர் ப. சாத்தன், கவிஞர் மதுர. மு. முத்தமிழ்க் குமரன்

**மொழி ஆய்வுப்பகுதி** புலவர் அ. நக்கீரர், புலவர் வெற்றியழகன்

**ஆசிரியர்** புலவர் த. சுந்தரராசன்

**ஆசிரியர் குழு** புலவர் முத்து. எத்திராசன், பாவலர் ம. கணபதி, த.ப.சி. குமரன், அ.வெ. நடராசன், ஆ. சம்பத் செல்வம், பொன். தமிழ்மணி

**பதிப்பாசிரியர்** இரா. கு. வள்ளிமணாளன்

**செய்தியாளர்** ஐ. ஆறுமுகம் ஆசிரியர்


# ஆங்கிலப் பள்ளிகளுக்குத் தனி இயக்ககம்
## தொடங்குவதைக் கண்டித்து 100 புலவர்கள் அறம்பாடுவார்கள்
# தமிழறிஞர்கள் தொடர்முழக்க ஆர்ப்பாட்டப் போராட்டம்

**நாள் : 8-12-2001 சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை**
**இடம் : வள்ளுவர் கோட்டம் அருகில், நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.**

தமிழக அரசு என்று பெயர் சூட்டிக் கொண்டு ஆங்கிலத்தை வளர்ப்பதிலேயே இந்த அரசு கவனமாகச் செயற்படுகிறது. தமிழ் வளர்ச்சியைப்பற்றிக் கடுகளவு கூடச் சிந்திக்காத கல்நெஞ்சக் கொடியவர்களாக ஆட்சியாளர்கள் உள்ளனர். தமிழ்நாட்டில் தமிழ் மொழி அழிக்கப்படுகிறது. குழந்தைகள் தங்கள் தந்தையை 'டாடி' என்றும், அம்மாவை 'மம்மி' என்றும் அழைக்கின்ற கொடிய செயல் நடைபெற்று வருகிறது. இதைவிடக் கொடுமை ஆங்கிலப்பள்ளிகள் பலவற்றில் தமிழில் பேசும் மாணவர்களுக்குத் தண்டனை வழங்கப்படுவதுதான். தமிழ்நாட்டில் தமிழில் பேசினால் தண்டனை என்னும் கொடுஞ்செயல் ஆட்சியாளர்களின் உள்ளத்தை வேதனைப்படுத்தவில்லை. ஏன் எனில் இவர்கள் தமிழ் மொழிக்கும், இனத்திற்கும் அன்னியர்கள் என்றும் தமிழ்ப் பகைவர்கள், தமிழ்த் துரோகிகள் என்றும், நினைக்கத் தோன்றுகிறது.

1976இல் தமிழ் நாட்டில் 30 மெட்ரிகுலேசன் பள்ளிகள்தாம் செயற்பட்டு வந்தன. தற்போது மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகள் 959, உயர்நிலைப்பள்ளிகள் 2523, ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் 49, கேந்திர வித்யாலயா பள்ளிகள் 250, சி.பி.எஸ்.சி. பள்ளிகள் 350, ஆங்கில மழலைப் பள்ளிகள் 45000 எனப் பெருக்கெடுத்துத் தமிழ்நாடு ஒரு குட்டி ஆங்கில நாடு போல் காட்சியளிக்கிறது. இத்தகைய கொடுமை நிகழ்வது தமிழகம் செய்த 'கேடு காலம்' என்றே கொள்ள வேண்டும். கட்சிகள், உள்ளத்தில் ஆங்கிலத்தைச் சுமந்து, உதட்டில் தமிழை வணிகம் செய்து கொண்டிருக்கின்றன. தமிழ் நாட்டில் தமிழ் வழிப் பள்ளிக்குத் தனி இயக்ககம் இன்று வரை தொடங்கப்படவில்லை. தற்போதுள்ள பள்ளிக்கல்வி இயக்ககம் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், இந்தி, சமற்கிருதம், பிரெஞ்சு, செர்மன், உருது உள்ளிட்ட அனைத்து மொழிகளின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டு வருகிறது. தமிழ் நாட்டில் தமிழ் வழிக் கல்விக்குத் தனிஇயக்ககம் இன்றுவரை காண முடியாத நிலையில் தமிழ் நாடு தத்தளித்து கொண்டிருக்கிறது. ஆனால் இந்த நிலையில் ஆங்கிலப்பள்ளிகளுக்குத் தனி இயக்ககம் என்று அரசு ஆணையிட்டுள்ளது. தமிழ் மக்களை அரசு எந்த அளவிற்கு இழிவுபடுத்துகிறது என்பதை எண்ணி வெட்கப்படுகிறோம்; வேதனைப்படுகிறோம்.

1995ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் செயலலிதா ஆட்சியின்போது பள்ளிக்கல்வி இயக்குநர் இரயான் தலைமையில் அமைக்கப்பட்ட தனிநபர் குழுவின் பரிந்துரையினை ஏற்று அரசு ஆங்கிலப் பள்ளிக்குத் தனி இயக்ககம் தொடங்கும் அறிவிப்பை வெளியிட்டது. அந்தக் கொடுஞ்செயலைக் கண்டித்துத் தமிழ்ப் புலவர்கள் பொங்கி எழுந்தனர். அன்றைய முதலமைச்சர் செயலலிதாவின் வீட்டு முன்பு தீக்குளிப்புப் போராட்டம் அறிவிக்கப்பட்டது. அரசு தன்னுடைய கொடுஞ் செயலைத் திருத்திக் கொண்டது.

இன்றைய ஆட்சியாளர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்குக் கடுகளவுகூட நன்மை செய்திடவில்லை. தமிழ்ப் பயிற்று மொழிக்கு அரசு அறிவித்த ஆணையினைச் சென்னை உயர்நீதிமன்றம் தடை செய்துள்ளது. இது தொடர்பான மேல் முறையீடு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது. தமிழ்ப்பயிற்று மொழித் தொடர்பாக அரசு கவனம் செலுத்துவதற்குப் பதிலாகத் தமிழ் மொழியினை அழிக்கின்ற கொடிய செயலுக்குத் துணை போகிறது. ஆங்கிலப் பள்ளிகளுக்குத் தனி இயக்ககம் தொடங்கும் அறிவிப்பை வெளியிட்டதன் மூலம் இந்த அரசு, ஆங்கிலக் கல்வி வணிகர்களின் கைப்பாவையாகச் செயற்படுகிறது என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது.

பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சட்டம் உள்ளிட்ட உயர்கல்விகள் அனைத்தும் தமிழ் வழியில் வேண்டும்; தமிழ் வழியில் படித்தவர்களுக்கே வேலைவாய்ப்பு வேண்டும் என்னும் கோரிக்கைகளைச் சிந்தித்துப் பார்க்க முடியாத இன்றைய அரசு, தமிழால் தமிழர்களை ஏய்த்துக் கொண்டிருக்கிறது.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு எனத் தொடங்கப்பட்ட அமைச்சகத்திற்கு மூடுவிழா நடத்திவிட்டு ஆங்கில வழிக்கல்விக்குத் தனி இயக்ககம் தொடங்குவது ஒன்றே இவர்களின் தமிழ் வளர்ச்சிச் செயற்பாட்டின் தகைசால் சான்று எனக் கொள்ளலாம். எனவேதான், தமிழ் மொழிக்கு இழைக்கப்பட்ட இந்தக் கொடுமையினை, அநீதியினை, துரோகச் செயலினைத் தடுத்து நிறுத்த தமிழ்ப்புலவர்கள் தங்களை மாய்த்துக் கொள்கின்ற அறவழிப் போராட்டத்தை மேற்கொள்கிறோம். முடியாட்சியில் பண்டை நாளில் தமிழ் காத்த புலவனுக்கு வெண்கவரி வீசி நின்ற அரசன் புகழ், வரலாற்றில் புகழ்ந்துரைக்கப்படுகிறது.

ஆனால், இன்று இந்தப் புனிதப் பணியில் வெஞ்சிறைக் கொடுமையும், தடியடியும், இழிசொற்களும்தாம் பரிசாகக்கிடைக்கும் எனினும் தமிழ்மொழியை இழிவுபடுத்தும் பகைவர்களின் கொடுஞ்செயல் என்றென்றும் வரலாற்றில் கறைபட்ட களங்கங்களாக நின்று நிலவட்டும் என அறைகூவல் விடுக்கிறோம்.

*மம்மி என்றது குழந்தை; அம்மா என்றது மாடு!*
*ஆங்கிலம் கலந்து தமிழ் பேசாதே;*
*அன்னை முகத்தில் கரிபூசாதே!*
*ஆங்கிலப் பள்ளிக்குத் தனி இயக்ககமா?*
*தமிழ்த் தாயின் கழுத்துக்குத் தூக்குக் கயிறா?*
*சூடு சொறணை கொஞ்சமும் இல்லை;*
*சொல்லடா நீயா தமிழனின் பிள்ளை?*

8-12-2001 காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை வள்ளுவர் கோட்டம் அருகில் தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் நடத்துவதுடன், நூறு தமிழ்ப் புலவர்கள் அறம்பாடும் நிகழ்வும் நடத்த இருக்கிறோம். இந்தப் புனிதப் பணிக்குத் தமிழ் அறிஞர்கள், தமிழ் உணர்வாளர்கள், தமிழ் அமைப்புகளைச் சார்ந்தவர்கள் அனைவரும் துணை நிற்பதோடு, கலந்து கொண்டு வரலாறு படைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தலைநகர்த் தமிழ்ச் சங்கம், தமிழ் அமைப்புகள்**

குறிப்பு :
(அறம்பாடும் புலவர்கள் தங்கள் பெயரினை விரைந்து பதிவு செய்யக் கேட்டுக் கொள்கிறோம்)

## பைபிளைப் பற்றி . . .

ஹார்ட்வெல் என்பவர் தமது வாழ்நாளில் 17 வருடங்களை பைபிளின் பழைய, புதிய ஏற்பாடுகளில் உள்ள வாசகங்கள், வார்த்தைகள், எழுத்துக்கள் ஆகியவற்றை எண்ணுவதற்காகவே செலவிட்டுள்ளார். இவர் கண்டுபிடித்த,

| | |
|---|---|
| எழுத்துக்கள் | - 3566480 |
| வார்த்தைகள் | - 773693 |
| வாசகங்கள் | - 31102 |
| பிரிவு | - 1189 |

மற்றும் 60 புத்தகங்களையும் கொண்டது பைபிள். இதில் 119வது அத்தியாயம் பெரியது ஆகும். 117வது அத்தியாயம் சிறியது ஆகும். பைபிளில் AND என்ற வார்த்தை 46277 தடவைகளும், LORD என்ற வார்த்தை 1855 இடங்களிலும் வருகின்றன. இதுமட்டும் அல்லாமல் இன்னும் பல தகவல்களை இவர் வெளியிட்டுள்ளார்.

*- எம். சங்கர்*

www.padippakam.com



# அண்ணா அமைதி பெற . . .

"உயர்தனிச் செம்மொழியான தமிழ் மொழி என்னுடைய தாய்மொழி என்ற பெருமிதம் எனக்கிருக்கிறது. நீண்ட வரலாற்றையும், புகழ்மிக்க பொற்காலங் களையும் உடைய மொழி. கவிஞர் யாத்த மொழி-கவிதைகள் கொஞ்சும் மொழி. கருத்தாலும், கவினுறு வளத்தாலும் கடலெனப் பரந்து கிடக்கும் மொழி எங்கள் உயிருடன் வாழ்வுடன் கலந்த மொழி-அந்தத் தமிழ்மொழி மற்றெதற்கும் தாழாத வகையில் ஆட்சி மொழி என்ற தகுதி தரப்படும் வரை நான் அமைதி பெற மாட்டேன்-திருப்தி அடைய மாட்டேன்.

மாநிலங்களவை உறுப்பினராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள், ஆட்சி மொழிகள் குறித்ததான விவாதத்தின்போது பங்கேற்றுப் பேசிய உரையின் ஒரு பகுதிதான் இது.

அண்ணாவை அனுப்பொழுதும் மறக்க மாட்டோம்! அவர்தம் கொள்கைகளை எந்நாளும் இழக்க மாட்டோம் என்று அன்றாடம் பேசி வரும் அவரது தம்பிமார்கள் நடுவணரசின் ஆற்றல் வாய்ந்த அமைச்சர்களாக மட்டுமின்றி, அவ்வரசினைத் தாங்கி நிற்கும் தூண்களாகவே விளங்குகின்ற இக்காலத்திலாவது, அன்னைத் தமிழ் ஆட்சி மொழி ஆகுமா? சீரிளமை மாறாத் தமிழ் செம்மொழி ஆகுமா? அண்ணாவின் இதயம் அமைதி பெறுமா?

# ஆய்வறிஞர் கா.சு. பிள்ளை பிறந்த நாள் 22.11.1888

இருபதாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் தமிழ்ப் பணிகள் பல ஆற்றித் தமிழகத்தின் தலை சிறந்த அறிஞர்களின் ஒருவராகத் திகழ்ந்தவர் ஆய்வறிஞர் கா.சு. பிள்ளை என்கின்ற கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்.

தமிழ்த் தொண்டையே தனிப் பெருந் தொண்டாகக் கருதி உழைத்த திரு.கா.சு. பிள்ளையைக் கல்விக்கடல் எனத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. பாராட்டியுள்ளார். அக்காலத்தே தென்னகத்தில் எம்.எல். பட்டம் வென்ற நால்வருள் ஒருவராகிய இவர், கொல்கொத்தா பல்கலை நடத்திய சட்டவியல் குறித்தான ஆய்வுரைப் போட்டியில் பங்கேற்று, தாகூர் சட்ட விரிவுரையாளர் என்ற சிறப்பினைப் பெற்றவர்.

சட்டத்துறையில் பெரும்பட்டம் பெற்றவ ராயினும், தான் கொண்ட தண்டமிழ்ப் பற்றின் காரணமாக அத்துறை விடுத்து அண்ணாமலை பல்கலையில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

தமிழ்-ஆங்கிலம் என இருமொழி புலமை பெற்றதன் காரணத்தால், பல அறிவியல் கலைச் சொற்களைத் தமிழில் உருவாக்கினார். (Geology-நிலநூல், Radium-கதிரி, Birth Control-கருத்தடை)

நீதிக் கட்சியில் இணைந்து அரசியல் தொண்டாற்றிய இவர் 1932ல் திருநெல்வேலி நகராட்சி மன்ற உறுப்பினராகத் தேர்வு பெற்றார்.

எழுத்தாற்றல், பேச்சாற்றல், எளிய தோற்றம், தணியாத தமிழ்ப்பற்று இவற்றின் அடையாளமாய் திகழ்ந்த தமிழ்த்திரு கா.சு. பிள்ளையின் புகழ் வாழ்க! அவர் போற்றிய தமிழ் வாழ்க!

# சாலையார் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல்

அறிஞர் சாலயாரின் மூன்றாம் ஆண்டு நினைவுச் சொற்பொழிவு, அண்ணா சாலை, தேவநேயப் பாவாணர் நூலகக் கருத்தரங்க அறையில் 27.10.2001 காரிக் கிழமை மாலை 6.00 மணி முதல் 9.00 மணி வரையில் நடைபெற்றது.

தலைநகர்த் தமிழ்ச்சங்கப் பொதுச் செயலாளர் புலவர் த. சுந்தரராசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு; புலவர் அப்துல் கரீம் அவர்களின் தமிழ் வணக்கப் பாடலுடன் தொடங்கியது. நிகழ்ச்சி அமைப்பாளர் அழகிய நம்பி நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். தமிழர் தேசிய இயக்கத்தைச் சேர்ந்த ஆவடி செ.ப. முத்தமிழ்மணி அவர்கள் தொடக்கவுரை ஆற்றினார். அவரது உரையில், சாலய்-சாலினி இணையர்கள் ஒத்த கருத்தோடு தமிழ் மொழிக்காகவும் தமிழ் இனத்திற்காகவும் தமிழ் மண்ணிற்காகவும் வாழ்ந்ததை நினைவு கூர்ந்தார். முனைவர் பட்ட ஆய்வாளர் மு. முருகேசன் சாலயார் பார்வையில் திருக்குறளும் - பாரதியும் என்ற தலைப்பிலான ஆராய்ச்சிக் கட்டுரையைப் படித்தார்.

தமிழ்த் தொண்டர் அறிஞர் ஊ. செயராமன் அவர்களுக்கு அன்னை சாலினியாரின் தமையனார் பொருளியல் பேரறிஞர் ச.இராசரத்தினம் அவர்கள் பொன்னாடை அணிவித்து, தமிழ் நெறிக் காவலர் என்ற விருதினை வழங்கிச் சிறப்பித்தார். சிறப்புரை ஆற்றிய இலக்கணப் பெரும் புலவர் த.சரவணத் தமிழன் அவர்கள் "இன்றைய நமது தேவை செய்யல் மட்டுமே" என்பதை வலியுறுத்திச் சிறப்பாக உரை நிகழ்த்தினார். புலவர் த. சுந்தரராசன் அவர்கள் தமது தலைமை உரையில், ஆங்கில ஆதிக்கத்தை ஒழித்து அனைத்துத் தளங்க ளிலும் தமிழே ஆட்சி செலுத்த வேண்டும் என்பதே நமது முதன்மையான நோக்கமாக இருக்க வேண்டும் என்று அறுதி இட்டு உறுதியாகக் கூறினார்.

சென்னைப் பல்கலைக் கழக ஆய்வு மாணவர் ஆ. மாரிமுத்து அவர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் அன்னை சாலினியாரின் அண்ணியார் திருமதி யமுனை ராசரத்தினம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

# வாழ்த்துகிறோம்!

தலைநகர்த் தமிழ்ச் சங்கத்தினுடைய பொருளாளரும், தமிழுக்காய்த் தன்னையே அர்ப்பணித்துத் தொண்டாற்றி வருபவரும் மக்கள் செங்கோல் இதழின் ஆசிரியர் குழுவில் ஒருவருமான

திருமிகு. அ.வெ. நடராசன்
அவர்களின் மகள்

செல்வி.
**அ.வெ.ந. அனுராதா**

செல்வன்.
**சரவணன்**

ஆகியோர் மணவிழா கடந்த 29.10.2001 அன்று சேலம் நகரில், திருவாவடுதுறை ஆதீனம் திரு. முத்துக் குமாரசாமி தம்பிரான் அவர்கள் முன்னிலையில், சான்றோர்கள் வாழ்த்துரைக்க இனிதே நடந்தேறியது. மணமக்கள் எல்லா வளமும் பெற்று இனிதே வாழ மக்கள் செங்கோல் வாழ்த்துகிறது.

# வடநாட்டு வந்தேறிகளால் வாழ்விழக்கும் தமிழர்கள்!

அண்மையில் தங்கநகை செய்யும் தொழிலாளி தனவேல் என்பவர் குடும்ப வறுமை காரணமாகத் தன் மனைவி மற்றும் மூன்று வயது மகன் ஆகியோருக்கு சயனைட் என்கிற நஞ்சைக் கொடுத்து, அவர்களோடு அதைத் தானும் அருந்தி மாண்டு போனார். ஒரு குடும்பமே அழிந்து போனதற்குக் காரணம், அவர் இதுநாள்வரை செய்து வந்த நகை செய்யும் தொழில் நசிந்து போனதுதான்.

இதுகுறித்து 15.10.2001 அன்று குமுதம் வார இதழில் வெளியான சிறப்புக் கட்டுரையொன்றில், தமிழ்நாடு நகைத் தொழிலாளர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மாணிக்கவேல் என்பவர் கூறிய கருத்து பின்வருமாறு :-

"வடநாட்டு மார்வாடிகள் தான் இந்த வறுமைக்குக் காரணம். முன்பெல்லாம் ஆசாரிகளே நேரடியாக ஜுவல்லரிகளில் இருந்து தங்கத்தை வாங்கி நகை செய்து கொடுத்து வந்தனர். கடந்த பத்து ஆண்டுகளாகச் சில மார்வாடிகள் இந்தத் தொழிலில் நுழைந்த பிறகு ஜுவல்லரிகளுக்கு அவர்களே நகைகளைக் கொடுக்கிறார்கள். அதிலும் பெரும்பாலான நகைகளை வடநாட்டிலிருந்து தயாரித்து இங்கே கொண்டு வருகிறார்கள். இதனால் தமிழ்நாட்டு ஆசாரிகளுக்குப் பிழைப்பு போய்விட்டது.

மேலும், தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை மத்திய அரசு நீக்கியது மார்வாடிகளுக்கு கொண்டாட்டம் ஆகிவிட்டது. அவர்களிடம் ஏகப்பட்ட பணம் இருக்கிறது. அதனால் கிலோ கணக்கில் தங்கத்தை வாங்கி வைத்துக் கொள்வதால் நகைத் தொழிலாளர்கள் இவர்களோடு போட்டிப்போட இயலவில்லை.


இருக்க இடம் தந்தால் மடத்தை பிடுங்குதல் போல் கொஞ்சம் கொஞ்சமாய் தமிழகத்தில் குடியேறிய வடநாட்டு மார்வாடிகள், தங்களது கள்ளப் பணத்தினால் இங்குச் செழித்தோங்கிய பல்வேறு தொழில்களைக் கைப்பற்றி ஆதிக்கம் செய்து தமிழர்களின் செல்வாக்கைக் குறைத்து, செல்லாக் காசாக்கியதைப் போல், இன்று நகை செய்யும் தொழிலிலும் நுழைந்து தமிழர்களை அழித்து வருகின்றனர்.

வறுமையில் மறைந்த தனபால் நமக்கு ஓர் எச்சரிக்கை. மேலும் இதுபோன்ற துயரங்கள் தொடராமல் இருக்க விழிப்புணர்வு தேவை.

www.padippakam.com



# தமிழ்மொழி பற்றித் தந்தை பெரியார் வெளியிட்ட இறுதிக் கருத்து இதுதான்!



தந்தை பெரியார் தமிழ் மொழியைக் கடும் விமர்சனத்துக்கு உட்படுத்தியது உண்மை! தமிழ் இலக்கியங்கள் இந்து இலக்கியங்களாகவும், பார்ப்பனர் மேலாண்மையையும் பெண்ணடிமைத் தனத்தையும் வலியுறுத்தி வந்தன என்பதே அதற்குக் காரணம். தமிழன் படிக்கும் உரிமையையே மனுதர்மத்தின் அடிப்படையில் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகப் பறிக்கப்பட்டுக் கிடந்த காலத்தில், தமிழனின் கல்வி உரிமைக்கு முன்னுரிமை கொடுத்துப் போராடிய பெரியார், பார்ப்பனர்களைப் போல ஆங்கிலத்தைப் பயன்படுத்தி சமூக முன்னேற்றத்தை எட்ட வேண்டும் என்று கருதினார். தமிழ் மொழிக் கல்வி பற்றியே சிந்திக்காத காலகட்டத்தில் மொழி வளர்ச்சி பின்தங்கிக் கிடந்த சூழலில், பெரியார் முன் வைத்த மொழி பற்றிய சிந்தனையை, இப்போது பார்ப்பனர்களும், பார்ப்பன ஏடுகளும் எடுத்துக்காட்டி எழுதி வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் தந்தை பெரியார் கடைசியாக மறைவதற்கு ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பாக மொழிபற்றி அவர் விடுதலையில் எழுதிய கட்டுரையை இங்கு வெளியிடுகிறோம்.

"ஒரு தேசம் மற்றொரு தேசத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும்போது ஒரு வகுப்பார் மற்றோர் வகுப்பார் மீது ஆதிக்கம் செலுத்தும் போதுதான் அன்னிய மொழி புகுத்தப்படுகிறது.

தாங்கள் பிறந்த இத்தமிழ் நன்னாட்டிற்கும் தங்கள் தாய்மொழிக்கும் நேர்மையான முறையில் தொண்டாற்ற முன்வருதல் வேண்டும். தங்கள் தாய்நாட்டிற்கும் தாய்மொழிக்கும் எதிராக உள்ளவர்கள் எவராயினும் அவர்களை விழ்த்த விரட்டியடிக்க முன் வருதல் வேண்டும். அந்தந்த நாட்டில் அந்தந்த மொழியே போதனா மொழியாக இருக்க வேண்டும். அந்தந்த நாட்டு மொழியிலேயே சர்க்கார் நடக்க வேண்டும். அந்தந்த நாட்டுக் கலையே பொது அறிவுக்கு உணவாக இருக்க வேண்டும்.

உலகில் தமிழ்நாடு ஒன்றில்தான், தமிழர் சமுதாயம் ஒன்றில்தான் தமிழர் சமுதாயம் மொழிக்கு வந்த இப்படிப்பட்ட ஆபத்தைப் பார்த்துக் கொண்டு செயலற்றுக் கிடக்கும் மக்களைக் காண முடியுமே தவிர மற்றபடி வேறு எங்கும் காண்பது மிகமிக அரிதென்றே சொல்லலாம்.

ஒரு நாடு சுதந்திரமடைந்து விட்டது, பூரண சுயேச்சை அடைந்துவிட்டது என்றால், அந்த நாட்டில் அன்னிய மொழி தேசிய மொழியாகவும், அன்னிய மொழி அரசியல் மொழியாகவும் இருப்பதுதானா?

நாம் தமிழர்கள் இந்நாட்டின் பூர்வீகக் குடிகள், நமது மொழி தமிழ் மொழி, நமது மொழிச் சொல்லை விட்டுவிட்டு வேறு ஒருவனுடைய சொல்லை நாம் ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்? அவனுடைய சொல்லை ஏற்றுக் கொண்டால் நாம் எல்லோரும் வேசி மக்கள் என்று சொல்லுகின்ற சம்பிரதாயங்களை எல்லாம் ஏற்றுக் கொண்டவர்கள் ஆவோம்.

மற்ற நாட்டில் எல்லாம் அந்நாட்டின் பெயர் அந்நாட்டின் மொழியின் அடிப்படையில் இருக்கிறது. சப்பான் மொழியைக் கொண்ட நாடு சப்பான் என்று உள்ளது. பிரான்சு மொழியைக் கொண்ட நாடு பிரான்சு என வழங்கப்படுகிறது. இப்படியே எல்லாமும், ஆனால் தமிழ் மொழியைக் கொண்ட நம் நாட்டிற்கு என்ன பெயர் ? இந்திய நாடு இந்திய நாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் என்ன சம்பந்தம்? இந்த எண்ணம் எங்களைத் தவிர வேறு யாருக்காவது ஏற்பட்டு உண்மையில் பாடுபடுகிறார்களா என்றால் கிடையாது.

மொழி உணர்ச்சி இல்லாதவர்களுக்கு நாட்டு உணர்ச்சியோ, நாட்டு நினைவோ எப்படி வரும்? நம் பிற்காலச் சந்ததிக்காவது சிறிது நாட்டு உணர்ச்சி ஏற்படும்படிச் செய்ய வேண்டுமானால், மொழி உணர்ச்சி சிறிதாவது இருந்தால்தான் முடியும்.

மொழியின் வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் சலுகையும் ஆதரவும் மிக முக்கியமாயிருக்கிறது. அரசாங்கத்தின் ஆதரவில்லாமல் ஒரு மொழி எவ்வளவு சிறப்புடையதாயினும் அதன் வளர்ச்சி மிகவும் தடைப்பட்டே நிற்கும்!"

# கொடிய பொடோ

## சட்டத்தை வேரோடு சாய்ப்போம்

இந்தியத் துணைக் கண்டம் கொடுங் கோன்மையின் - மறுவடிவாக மாறிக் கொண்டு வருகிறது. மக்களாட்சி என்னும் பெயரில் மக்களை வதைக்கும் சட்டங்கள் காலம் தோறும் வேறு வேறு வடிவங்களில் உருப்பெறுகின்றன.

இந்தியப் பாதுகாப்புச் சட்டம், தேசியப் பாதுகாப்புச் சட்டம், தடுப்புக் காவல் சட்டம், உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் எனப் பல சட்டங்கள் உள்ளன.

1976ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மிசா சட்டத்தில் வதைபட்டவர்கள் எண்ணிக்கை, அளவிடற்கரியது 1985ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தடா சட்டத்தை மக்களாட்சியில் நம்பிக்கை உடைய அனைவரும் எதிர்த்தனர். 1995ஆம் ஆண்டு அச்சட்டம் தானே செயலற்றுவிட்டது.

தற்போது பயங்கர வாதத்தை ஒடுக்குகிறோம் என்னும் பெயரில் பொடோ சட்டம் கொண்டு வரப்படுகிறது. இச்சட்டத்தின்படி பயங்கரவாதிகள் பற்றிய ஏதேனும் தகவலை ஒருவர் தெரிந்து, காவல்துறைக்குத் தெரிவிக்காமலிருந்தால் ஓராண்டு சிறைத் தண்டனை விதிக்க இச்சட்டம் பிரிவு 3(8) வகை செய்கிறது.

மேலும் பிரிவு 14-குற்றத்தை விசாரிக்கும் விசாரணை அதிகாரிக்குக் கூடுதல் அதிகாரத்தை வழங்குகிறது.

காவல்துறை அதிகாரிகளின் நேர்மைக்குப் புடம் போட்டவர்கள் என்று கூறுகின்ற தகுதியைப் பெறவில்லை.

மனம் போன போக்கிலும், ஆளும் கட்சியின் கைப்பாவையாகவும் செயற்படும் காவல்துறை அதிகாரிகள் கையில் எடுத்துக்கொள்ளும் தவறான ஆயுதமாக பொடோ சட்டம் பயன்படப்போகிறது.

வெள்ளையன் காலத்தில் கொண்டுவரப்பட்ட ரௌலட் சட்டத்தை விடக் கொடிய சட்டம் இது. வழக்கறிஞர்கள், செய்தியாளர்கள், தமிழ் உணர்வாளர்கள், தேசியச் சிந்தனையாளர்கள் சட்டத்தின் துணை கொண்டு ஒடுக்கப்படுவார்கள். எனவே இந்தக் கொடிய போடோ சட்டத்தை முழுதுமாக நீக்குவதற்கு, அனைத்து மக்களையும் கருத்துத் தெளிவு படுத்த வேண்டும். அனைவரும் ஓரணியில் நின்று இந்தப் போடோ சட்டத்தை எதிர்த்து வெற்றி காண வேண்டும்.

# சென்னை வானொலியின் தமிழ் அழிப்பு

சென்னை வானொலி சில ஆண்டுகளுக்கு முன் நாள்தோறும் காலை 7.40 அல்லது 7.45 மணி அளவில் தமிழறிவோம் என்னும் நிகழ்ச்சியினை ஒலிபரப்பத் தொடங்கியது. இதற்கான காலம் ஐந்து மணித்துளிதான். இந்த நிகழ்ச்சியினைச் சென்னை வானொலி சென்னை, சென்னைப் புற நகரோடு சுருக்கிக் கொண்டது. நாடெங்கும் உள்ளவர்கள் பயன்படும் நல்ல நிகழ்ச்சி நீக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சிக்கு மாறாக வைரமுத்து பாக்களை ஒலிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தனிநபரின் வளர்ச்சிக்காகத் தமிழ் வளர்ச்சி தடைபடுத்தப்பட்டுள்ளது. இந்தக் கொடுஞ்செயலைத் தலைநகர்த் தமிழ்ச்சங்கம் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறோம். சென்னை வானொலியின் இந்தத் தமிழ் அழிப்புச் செயலைக் கண்டித்துத் தமிழ் உணர்வாளர்கள், சென்னை வானொலி நிலையத்திற்குக் கண்டனக் கடிதங்களை எழுதக் கேட்டுக் கொள்கிறோம்.

## தமிழ்க் குருதி

ஓடும் குருதி தமிழ்க் குருதி
உணர்ந்து தேடுவீர் தமிழ்க்குருதி
நாடும் மொழியும் நம் தமிழ் இனமும்
நலம் பெறக்கருதி
நற்பணிகள் ஆற்றுவோம் மிகுதி!
தாரணியில் தமிழர் குருதி
நாளும் உயர்ந்திடக் கருதி
நாட்டுவோம் நாமே தமிழ்ப்பரிதி!

- பழனி-மகிழ்நன்

படிப்பகம்

www.padippakam.com



# இருப்பதைக் காக்க . . . விழிப்புடன் இருப்போம்

*வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*
*வைத்தூறு போலக் கெடும் - குறள்*

1956 நவம்பர் ஒன்று, இந்நாளைத் தமிழர்கள் மறந்திருக்கக் கூடும். ஏனெனில் நமக்காகவும், நம் தமிழ்இனம், மொழி இவற்றிற்காகவும் உழைத்து மறைந்திட்ட எத்தனையோ தலைவர்களையும், தியாகி களையும் மறந்து விட்ட மறதிக்காரர்கள் தான் நாம்.

### வடவேங்கடம் தென்குமரி

ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து - என்று தமிழகத்தின் எல்லைகள் குறித்து, பாயிரம் பாடிய பனம்பாரனார் பாடிய காலத்து நிலை மாறி, இன்று வடக்கே திருத்தணி தெற்கே குமரி என்கிற நிலை வந்ததற்கு யார் காரணம்? இது நமது தாய் மண் என்கிற சிந்தனை மறதியும், எது குறித்தும் கவலை கொள்ளாத அலட்சியப் போக்கும் தானே?

அண்டை மாநிலங்களைச் சார்ந்த மலையாளியும், கன்னடனும், தெலுங்கனும், நம் மண்ணைக் கொள்ளை கொண்டு போன நாள் நவம்பர் ஒன்று; இன்னும் எந்தப் பகுதிகளையெல்லாம் தமிழனின் கண்ணைக் கட்டிவிட்டுக் கைப்பற்றலாம் என்று கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் அயலவர்கள்.

சான்றாக, தமிழ்நாடு-கேரளம் ஆகிய மாநிலங்கள் உருவாகி 45 ஆண்டுகள் நிறைவுற்றும், இன்றளவும் இவற்றிற்கு இடையேயான 830 கி.மீ. தூரமுள்ள எல்லைக்கோடு திட்டவட்டமாக இவை தாம் என்று நிர்ணயிக்கப்படவில்லை. கோவை மாவட்டத்திலுள்ள முதுமலையில் தொடங்கிக் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நெய்யாற்றங்கரை தாலுக்கா, கொல்லங்கோடு வரையிலும் நீண்டுள்ள இந்த எல்லைப் பகுதியினை இரு மாநில அதிகாரிகளும் கூட்டாக அளவிட்டு நிர்ணயித்திருக்க வேண்டும். இதுவரை 203 கி.மீ. தூரம் வரைதான் அளவிட்டிருக்கிறார்கள். மீதமுள்ள 627 கி.மீ. தூரமுள்ள எல்லைப் பகுதியினை அளவிடக் கேரள அரசு ஒத்துழைக்க மறுக்கிறது. காரணம், இருமாநிலங்களின் இடையேயுள்ள எல்லைப் பகுதிகளில் புகுந்து மலையாளிகள் ஆக்கிரமித்துக் கொண்டு உள்ளனர். இந்த ஆக்கிரமிப்பு தொடர்ந்து கொண்டிருக்கிறது. இது தொடர வேண்டும் தமிழகத்தின் எல்லைப் பகுதியினை மேலும் குறைத்து, கேரளப் பகுதிகளை விரிவாக்கிட வேண்டும் என்கிற வஞ்சக எண்ணம் கேரள அரசிடம் நிலவுகிறது.

மலையாளிகளின் மண்ணைத் திருடும் மனப்போக்கு தொடருமேயானால், ஏமாந்த காலத்தில் இழந்ததைப் போலத் தமிழகம் இன்னும் பல வளமான பகுதிகளை இழக்கவேண்டிய நிலை ஏற்படும்.

*மண்ணை இழப்பதும் மானம் இழப்பதும் ஒன்றுதான்*
*மானம் இழந்தும் மண்ணைக் காப்பது நன்று!*

# முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் பிறந்த நாள் 10.11.1899

தமிழுணர்வு, பகுத்தறிவு, தன்மதிப்பு இம்மூன்றும் தழைத்தோங்கி வளர்ந்திட, தன் இறுதி நாள் வரை தளராமல், தயங்காமல் உழைத்திட்ட முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தமிழகத்தின் வரலாற்றில் தனிச்சிறப்பைப் பெற்றிட்ட திருச்சி மாநகரில் தந்தை பெரியண்ணப் பிள்ளைக்கும், தாய் சுப்புலட்சுமி அவர்கட்கும் பதினாறாம் பிள்ளையாய் 1899 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 10ஆம் தேதி பிறந்தார்.

உண்ணியூர் சபாபதி முதலியாரிடம் இலக்கணமும், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரிடம் இலக்கியமும் கற்றுத் தமிழ்ப் புலமைப் பெற்ற இவர், திருக்குறள் புதைபொருள், தமிழ்ச்செல்வம், மும்மணிகள், தமிழின் சிறப்பு, தமிழ் மருந்துகள் உள்ளிட்ட நூல்களை இயற்றிப் பெருமை பெற்றார்.

திராவிட இயக்கங்களின் முதல் வடிவமான தென்னிந்திய நல உரிமைச் சங்கம் எனும் பெயர் பெற்ற நீதிக்கட்சியில் பங்கேற்றுத் தொண்டாற்றிய பின்னர், தமிழர் தலைவர் தந்தை பெரியார் அவர்கள் உருவாக்கிய சுயமரியாதை இயக்கத் தூண்களில் ஒருவராகவும், அவரது குடியரசு இதழில் துணை ஆசிரியராகவும் சிலகாலம் பணியாற்றினார்.

கி.ஆ.பெ. அவர்கள் தமது இளமைப் பருவம் முதற்கொண்டே சாதி வேற்றுமை, மூடத்தனம், பெண்ணடிமைத் தனம் போன்ற இழிவான கொள்கைக்கு எதிராகவே பேசியும், எழுதியும் வந்தார். 1959 ஆம் ஆண்டு இவரது மணிவிழா நினைவாக அன்னைத்தமிழின் புகழுக்கு அணி சேர்த்திட 49 புலவர் பெருமக்களைக் கொண்ட குழு ஒன்றினை அமைத்தார். தமிழகத்தின் முதல்வராகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் நடத்திய இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சிறப்புற நடைபெற அவருக்கு உறுதுணையாய் விளங்கினார்.

இனநலம், மொழிநலம் காக்கும் பல்வேறு போராட்டக் களங்களைத் தலைமையேற்று நடத்தினார். தமிழ், தமிழர், தமிழகம் இம்மூன்றும இமைபோல் காத்திட இன்னல்கள் பல ஏற்ற முத்தமிழ்க் காவலரின் வழி நின்று உயிர்நிகர் தமிழ் காக்க உறுதியேற்போம்!

## உலகில் ஒரு நிமிடத்தில் . . .

*34 திருமணங்கள் நடக்கின்றன. மூன்று மணமக்கள் விவாகரத்துகள் செய்கின்றார்கள்.*

*36 புயல்கள் உருவாகின்றன, 68 கார்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.*

*100 பேர் மரணம் அடைகிறார்கள். 114 குழந்தைகள் பிறக்கின்றன.*

*14,000 கன அடி மழை பெய்கிறது. 35,000டன் தண்ணீர் கடலில் கலக்கிறது.*

*2,80,000 தொலைபேசி மணிகள் ஒலிக்கின்றன.*

*6,00,000 சிகரெட்டுகள் புகைக்கப்படுகின்றன.*

*6,38,000 காலன் மது செலவாகிறது.*

*700 டன் இரும்பு வெட்டி எடுக்கப்படுகிறது.*

*850 மைல் தூரம் பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்கிறது.*

*4,600 பாத அணிகள் தைக்கப்படுகின்றன.*

*14,000 டன் உணவுப் பொருள்கள் உண்ணப்படுகின்றன.*

– ந. தியாகராஜன்

## சோற்றுக்குக் கேடா நாம்?

பாவரிமா இளஞ்சித்திரன்

*அன்னைத் தமிழே ஆட்சிக் கழகு!*
*அடஓய் தமிழா, அதில்நீ பழகு!*
*அன்னைத் தமிழின் நாடிது தானே!*
*அயலவர், வேற்றவர் நாடும் அல்லவே!*
*பள்ளியை, கல்வியைத் தமிழில் நடத்து!*
*பரங்கியர் மொழியைப் பாடையில் கிடத்து!*
*கொள்ளியைப் போலுனக்(கு) ஆங்கிலம்! தெரியுமா?*
*குலத்தையே எரிக்கும்! அதுமெய் புரியுமா?*
*தில்லிக் காரன் இந்தியை ஏற்பையா?*
*சீட்டுக் கிழித்ததன் கணக்குகள் தீர்ப்பையா?*
*இல்லையென் றால்நீ காலமும் அடிமையே!*
*இதனால் அழியப் போவதுன் குடிமையே!*
*ஏற்கென வேநீ எல்லாம் இழந்தவன்!*
*இனியும் இழக்க என்னடா உள்ளது?*
*போர்க்குணம் எங்கே? புதைந்தே போனதா?*
*புறத்திணைப் பாட்டெலாம் குப்பைக் கானதா?*
*சேரன், சோழன், பாண்டியன் என்கிறாய்!*
*சீ!சீ! எனும்படி அன்றோ நிற்கிறாய்!*
*வீரம், மானம் போனதும் எங்கே?*
*விழுந்து விட்டதே! உன்கொடி எங்கே?*
*சூடு, சொரணை எதிலும் இல்லையே!*
*சோற்றுக்குக் கேடாய் இருப்பதோ பிள்ளையே!*
*நாடும் இந்தி மொழியினுக் காகவோ!*
*நாமதை இழந்து தெருவினில் சாகவோ!*

## திருக்குறள் உரையாசிரியப் பெருமக்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. மணக்குடவர் | (1917–1925) | 22. முனைவர் சே. சந்திரன் | (2001) | 43. ச. தண்டபாணி தேசிகர் | (1950–52) | 64. சிற்இராமதேசிகன் | (1981) |
| 2. பருதியார் | (1938–1948) | 23. முனைவர் அர. சிங்காரவேலன் | | 44. வழக்கறிஞர் வ.உ. சிதம்பரனார் | (1935) | 65. ஞானபூபதியார் | |
| 3. பரிப்பெருமாள் | (1948) | 24. முனைவர் மு.பெரி.மு. இராமசாமி | (1991) | 45. வழக்கறிஞர் வீ. முனிசாமி | (1983) | 66. ஈக்காடு சபாபதியார் | (1956) |
| 4. காலிங்கர் | (1948) | 25. முனைவர் அ. சங்கரவள்ளி நாயகம் | (1997) | 46. வழக்கறிஞர் கு.ச. ஆனந்தன் | (1986) | 67. ந.சி. கந்தையா | (1949) |
| 5. தருமர் | (1958) | 26. பேராசிரியர் எசு. இராமகிருட்டினன் | (1991) | 47. வழக்கறிஞர் நா. விவேகானந்தன் | (1998) | 68. மு.கு. சுப்பிரமணியனார் | |
| 6. தாமத்தர் | (1958) | 27. பேராசிரியர் ஐயன்பெருமாள் | | 48. வேங்கடராமையா | (1952) | 69. திரு.வி. கலியாண சுந்தரனார் | (1939) |
| 7. நச்சர் | (1958) | 28. பாவலர் பெருஞ்சித்திரனார் | | 49. மயிலை. சிவமுத்து | (1968) | 70. மதுரை செகவீரபாண்டியனார் | |
| 8. திருமலையர் | (1958) | 29. பாவேந்தர் பாரதிதாசன் | (1992) | 50. பாலூர்க் கண்ணப்பர் | (1953) | 71. கா. அப்பாத்துரையார் | (1968) |
| 9. மல்லர் | (1958) | 30. பேராசிரியர் சங்கர ராசலு | | 51. சே. கிருட்டினன் | | 72. ஞா. தேவநேயப் பாவாணர் | (1969) |
| 10. பரிமேலழகர் | (1861) | 31. புலவர் குழந்தை | (1952) | 52. திருச்சிராப்பள்ளி வரதராசன் | (1958) | 73. சரவணப் பெருமாள் | (1838) |
| 11. முனைவர் மு. வரதராசனார் | (1949) | 32. புலவர் வி.பொ. பழனிவேலனார் | (1999) | 53. பா.சு. சுப்பிரமணியனார் | | 74. களத்தூர் வேதகிரியார் | (1850) |
| 12. முனைவர் சி. இலக்குவனார் | (1959) | 33. முனைவர் மு. கோவிந்தசாமி | (1962) | 54. சகதேவனார் | | 75. சுகாத்தியர் | (1889) |
| 13. முனைவர் வ.சுப. மாணிக்கம் | (1991) | 34. பேராசிரியர் சாலமன் பாப்பையா | (1999) | 55. நாமக்கல் பாவலர் இராமலிங்கம் | (1954) | 76. சுந்தரம் | (1893) |
| 14. முனைவர் இரா. சாரங்கபாணி | (1999) | 35. முனைவர் சண்முகசுந்தரம் | (1998) | 56. பால்வண்ணன் | (1957) | 77. சுந்தர சண்முகனார் | (1966) |
| 15. முனைவர் கு. மோகனராசு | (1994) | 36. புலவர் ச. சீனிவாசன் | (1969-1992) | 57. சாமி. சிதம்பரனார் | (1959) | 78. காயாமொழி குமரகுருபரர் | (1928) |
| 16. முனைவர் கு. சுந்தரமூர்த்தி | (1981) | 37. பேராசிரியர் கா. சுப்பிரமணியனார் | (1955) | 58. வெ. கண்ணையனார் | (1954) | 79. சுப்பிரமணிய சாத்திரியார் | (1939) |
| 17. முனைவர் தமிழண்ணல் | (1999) | 38. மு. இரா. அருணாசலக் கவிராயர் | (1913) | 59. புலவர் நாராயணசாமி | (1987) | 80. ச. வெள்ளைச்சாமி | (1954) |
| 18. முனைவர் நவராசு செல்லையா | (1999) | 39. அரசஞ் சண்முகனார் | (1919) | 60. வீரமாமுனிவர் | (1830) | 81. எம்.இ. வீரபாகு | (1954) |
| 19. முனைவர் பா. வளன்அரசு | (2001) | 40. சு.அ. இராமசாமிப் புலவர் | (1944) | 61. இராமானுசர் | (1840) | 82. புலவர் க. அரசுமணி | (1960) |
| 20. முனைவர் பூவண்ணன் | | 41. மு.இரா. கந்தசாமிக் கவிராயர் | (1950–62) | 62. கவிராசபண்டிதர் | (1949) | 83. புலவர் இரா. இளங்குமரனார் | (1990) |
| 21. முனைவர் ந. சுப்பு | (1993) | 42. கே. வீரராகவனார் | (1929) | 63. பொன்னம்பலம் இராமநாதன் | | 84. புலவர் சி. இராசியண்ணன் | (1993) |



85. புலவர் செந்துறை முத்து (1967)
86. புலவர் கி. வா. சகந்நாதன் (1963)
87. பழைய உரை (உ.வே.சா.) (1961)
88. நாவலர் இரா. நெடுஞ்செழியன் (1991)
89. கலைஞர் மு. கருணாநிதி (1996)
90. குமா. பாலசுப்பிரமணியன்
91. சுத்தானந்த பாரதியார்
92. பட்டுச்சாமி ஓதுவார் (1958–60)
93. தி. மாணிக்கவாசகம்
94. ஆ. அரங்கநாதன் (1933)
95. கோ. வடிவேலு
96. நாகை சோ. தண்டபாணி (1933)
97. அரிமதி தென்னகன் (1995)
98. பவானி தாசன்
99. ஆ.வே. இராமசாமி (2001)
100. இரா. இராசேந்திரன்
101. தமிழ்வேட்பன்
102. அ. ஆறுமுகம்
103. வே. கபிலன்
104. இரா. கனகசுப்புரத்தினம் (2000)
105. மேலகரம் முத்துராமன் (1999)
106. கோ. பார்த்தசாரதி
107. சுசாதா
108. புலியூர்க்கேசிகன்
109. மாவண்கிள்ளி
110. அயோத்திதாசன் (1914)
111. மு. இராமசுப்பிரமணியன் (1988)
112. புலவர் அ. மாணிக்கம் (1988)

தொகுத்தவர் – முனைவர் பா. வளன்அரசு

ஆசிரியர் : புலவர் த. சுந்தரராசன், வெளியீட்டாளர் இரா. கு. வள்ளிமணாளன், முகவரி : தந்தை பெரியார் இல்லம், 18, மங்களபுரம் முதல்வீதி, சேத்துப்பட்டு, சென்னை-600 031.
வடிவமைப்பு : சிபி கணினி மையம், சென்னை-600 005. ✆ 8518258 அச்சிட்டோர் : அலைகள் அச்சகம், 36, தெற்கு சிவன் கோயில் தெரு, சென்னை - 600 024.

படிப்பகம்